SENGUNTHAR
# Daily News
10-11-2025/SEC/DN/297



## Guest Lecture Explores Future of VLSI

The Department of Electronics and Communication Engineering at Sengunthar Engineering College organized a guest lecture on “The Future of VLSI: Trends and Challenges” on November 10, 2025. The session was delivered by Mr. S. Janarthanan, Senior Layout Engineer at Micron Technology Operations India LLP, Bengaluru.The lecture aimed to provide students with an understanding of emerging trends, innovations, and technological advancements in VLSI design and fabrication. It also focused on analyzing the key challenges and opportunities influencing the future of the semiconductor industry.Students gained valuable insights into the latest developments in VLSI, including advancements in design, scaling, performance, and power optimization. The event was coordinated by Mrs. D. Ramya, Assistant Professor, Department of ECE.

திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி

## மின்னணுவியல் துறை மாணவர்கள் புதிய கண்டுபிடிப்பு



திருச்செங்கோடு.நவ.9-

திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்கள் புதிய கண்டுபிடிப்பாக இ-ஸ்கூட்டர் உருவாக்கி உள்ளனர். இதனுடைய அதிகபட்ச வேகம் மணிக்கு 40 கி.மீ ஆகும். ஒரு முழு சார்ஜில் 70 கி.மீ வரை பயணிக்கலாம். இதனை தயாரிக்க ரூ.45 ஆயிரம் செலவானது. இதனை முழுமையாக சார்ஜ் செய்ய 5 மணி நேரம் தேவைப்படும்.

இந்த ஸ்கூட்டரின் பின் வீலில் 60 வோல்ட் மற்றும் 100 வாட்ஸ் திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இந்த இ-ஸ்கூட்டர் வடிவமைத்த மாணவர்களை செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் தாளாளர் ஆ.பாலதண்டபாணி, செங்குந்தர் பொறியியல் கல்லூரி முதல்வர் சதீஷ்குமார் செயல் இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு ஆகியோர் பாராட்டி பரிசுகள் வழங்கினர்.

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள் 656
ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

விளக்கம்
பசியால் துடிக்கும் தனது தாயின் வேதனையைத் தணிப்பதற்காகக்கூட இழிவான செயலில் ஈடுபடக்கூடாது.

## இலக்கணக் குறிப்பறிதல்

**1. பொருளாகுபெயர்**

முதல் பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய இன்னொரு (உறுப்பு) பொருளுக்கு ஆகி வருதல்.

**(எ.கா)** மல்லிகை சூடினாள்.

இங்கு மல்லிகை கொடியைக் (மல்லிகை) குறிக்காமல் 'சூடுதல்' என்னும் வினையால் பூவைக் (சினையை) குறித்தது.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: சிநேகிதம்  தமிழ்மொழி : நட்பு